விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆவணி 27 செவ்வாய்க்கிழமை (12.09.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 258

ராம்கோ
RAMCO
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## துன்னாலை தெற்கில் இளைஞன் சுட்டுக்கொலை

(துன்னாலை)

துன்னாலை தெற்கு மாலிசந்தைப் பகுதியில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் இளைஞன் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த மயில்வாகனம் சசிகரன் (வயது 24) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார். பிரஸ்தாப இளைஞன் வீட்டிற்கு அருகில் நின்றிருந்தவேளை மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் அவரை (04 ஆம் பக்கம் பார்க்க)

## சுன்னாகத்தில் இளைஞனின் சடலம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் நாகம்ஸ் திரையரங்குக்கு அருகாமையில் உள்ள ஒழுங்கையில் சூட்டுக்காயங்களுடன் இளைஞன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கறுப்பு நீளக்காற்சட்டை அணிந்திருந்த குறித்த இளைஞனின் சடலத்தின் இரண்டு கண்களிலும் சுடப்பட்ட நிலையில் சடலமாக நேற்றுக் காலை 5.30 மணிக்கு மீட்கப்பட்டுள்ளது. (04 ஆம் பக்கம் பார்க்க)

## மந்துவில் கிழக்கில் இளைஞன் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

மந்துவில் கிழக்கில் கள்ளுத் தவறணையில் வைத்து இளைஞன் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளார்.

முன்னாள் ஹலோ ரெஸ்ட் மிதிவெடி அகற்றும் நிறுவனத்தில் பணிபுரிந்த துரைசிங்கம் சசிகரன் (வயது 24) என்ற இளைஞனே சைக்கிளில் சென்ற இருவரினால் சுட்டுக்கொல்லப்பட்டவராவார். (04 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி மகிந்த-ரணில் நேற்று அவசர சந்திப்பு

## முக்கிய விடயங்கள் குறித்து பேச்சு

(கொழும்பு)

இலங்கையின் தேசியப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் முகமாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையிலான முக்கிய சந்திப்பொன்று நேற்று இடம் பெற்றது.

விசேட அழைப்பின் பேரில் இச் சந்திப்பு நேற்று மாலை 6.30 மணியளவில் அலரிமாளிகையில் நடைபெற்றது. இச் சந்திப்பு சுமார் ஒரு மணிநேரம் நடைபெற்றது. (04 ஆம் பக்கம் பார்க்க)



## முகமாலை மோதல் சம்பவத்தில் இரு தரப்பிலும் 148 பேர் பலி

### இராணுவம் தெரிவிப்பு

(கொழும்பு)

முகமாலையில் கடந்த சனிக்கிழமை அதிகாலை முதல் இடம் பெற்ற மோதலில் இருதரப்பிலும் 148 பேர் கொல்லப்பட்டுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளிற்கும் இராணுவத்தினருக்குமிடையே முகமாலை முன்னரங்கப் பகுதிகளில் தாக்குதல் இடம் பெற்றது.இதில் விடுதலைப்புலிகளிற்கு பலத்த இழப்பு ஏற்பட்டுள்ளது என இராணுவம் தெரிவித்துள்ளது.

இதனிடையே மாறிமாறிமேற் கொள்ளப்பட்ட ஆட்லறித் தாக்குதலிலும் பலர் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ச)

## இரு பெண் உட்பட 12 சடலங்கள் வைத்தியசாலையில் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

முகமாலை முன்னரங்கப் பகுதியிலிருந்து மீட்கப்பட்ட விடுதலைப்புலிகளினுடையது எனக்கருதப்படும் இரண்டு பெண்கள் உட்பட 12 சடலங்களை கொடிகாமம் பொலிஸார் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

முன்னரங்கப் பகுதியில் இராணுவத்தினருக்கு எதிரான மோதலில் கொல்லப்பட்ட விடுதலைப்புலிகளினுடைய சடலங்கள் என இராணுவப் பொலிஸாரால் கொடிகாமம் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவற்றில் பெண்கள் இவரினதும் ஆண் ஒருவரினதும் சடலம் தமிழீழ விடுதலைப் புலிகளினுடையது எனவும் ஏனைய 9 சடலங்களும் தமிழீழ (04 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் மோதல் சம்பவம்

(மட்டக்களப்பு).

மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதேச எல்லைப் பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையே மோதல் நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

வாழைச்சேனை பிரதேச எல்லையோரப் பகுதியான கஜுவத்தையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 10.30 மணிமுதல் ஒரு மணிநேரத்திற்கு மேல் இரு தரப்பினிடையே எறிகணைத் தாக்குதல் நடந்ததாக கூறப்படுகிறது.

இரு தரப்புச் சேதவிபரங்கள் வெளியாகவில்லை. இம் (04 ஆம் பக்கம் பார்க்க)

## இணைத்தலைமை நாடுகளிடமிருந்து அரசு-புலிகளுக்கு இன்று முக்கிய செய்தி

### விடயமறிந்த வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய பிரச்சினைகள் தொடர்பாக இன்று கூடும் டோக்கியோ இணைத்தலைமை நாடுகள் உறுதியான எச்சரிக்கை ஒன்றை வெளியிட இருப்பதாக தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளிற்கும் அழுத்தங்களை பிரயோகிக்கும் அறிவித்தலை இணைத் தலைமை நாடுகள் வழங்க இருப்பதாக நோர்வேயின் சர்வ தேச அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல்ஹெய்மின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

போர் நிறுத்த உடன்படிக்கையை பாதுகாப்பது தொடர்பாகவும் தாக்குதல் சம்பவம் இடம் பெறுகின்றமை குறித்தும் இரண்டு தரப்பினரையும் இணைத்தலைமை நாடுகள் குற்றம் (04 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நாடு கடத்தப்பட்டவர் சுருக்கிட்டு தற்கொலை

பிரித்தானியாவினால் திருப்பியனுப்பப்பட்டு கடந்த யூலை மாதம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்து தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழர் ஒருவர் நேற்று முன்தினம் மாலை சுருக்கிட்டுத் தற்கொலை செய்துள்ளார் என்று கட்டுநாயக்க விமான நிலையத்தின் கடமை நேர முகாமையாளர் தெரிவித்தார்.

யாழ்.கோப்பாயைச் சேர்ந்த ஜெயக்குமார் சுப்பிரமணியம் என்பவரே இவ்வாறு சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டதாகத் தெரியவருகின்றது.

கடந்த யூலை மாதம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த இவர் சட்ட சிக்கல் காரணமாகவும் தேவையான ஆவணங்கள் இல்லாமையினாலும் நாட்டினுள் பிரவேசிக்க அனுமதிக்கப்படாமல் குடிவரவு குடியகழ்வு திணைக்கள அதிகாரிகளினால் விமான நிலையத்திலேயே தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்த அறைக்குள்ளேயே சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டதாக விமான நிலையத்தின் கடமை நேர முகாமையாளர் மேலும் தெரிவித்தார். (ச-5)

# பொருள் விநியோகம் தொடர்பாக செயலகத்தில் இன்று கலந்துரையாடல்

## சம்பந்தப்பட்டவர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக நிவாரணம் வழங்கல் மற்றும் விற்பனைப் பொருட்கள் வழங்குதல் தொடர்பான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10 மணிக்கு யாழ்.மாவட்ட செலகத்தில் அரச அதிபர் க.கணேஷ்தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு பின்வருவோருக்கு யாழ்.அரச அதிபர் அழைப்பு விடுத்துள்ளார்.

சகல பிரதேச செயலர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவியாணையாளர், சகல ப.நோ.கூ.சங்கங்களின் தலைவர்கள், அவற்றின் பொதுமுகாமையாளர்கள், யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம், யாழ்.மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் என்பவற்றின் தலைவர்களும்செயலாளர்களும் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ச)

# தொழில் நுட்ப அலுவலர் தரம் II 'ஆ' பதவிக்கு 16, 17 ஆம் திகதிகளில் நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு இலங்கை தொழில் நுட்ப சேவையின் தொழில் நுட்ப அலுவலர் தரம் II 'ஆ' பிரிவுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சையின்படி தகைமை பெற்றுள்ளவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 16 ஆம் 17 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

குறிப்பிட்ட தினத்தில் எட்டாம் மாடியில் உள்ள பொது நிர்வாக அமைச்சு அலுவலகத்திற்கு நேர்முகப் பரீட்சைக்கு தோற்றும்படி கடிதம் மூலம் அழைக்கப்பட்டிருந்ததாகவும் எனினும் யாழ்.மாவட்டத்தில் தபால் சேவை சீரின்மையினால் வழங்க முடியவில்லை எனத் தெரிவித்து தனக்கு பக்ஸ் மூலம் அறிவித்துள்ளதாகவும் யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விபரம் வருமாறு,

ரி.சுரேஷ் (நுணாவில் மேற்கு, சாவகச்சேரி), ஈ.செல்வராஜன் (செம்பியன்பற்று தெற்கு,தாழையடி,ஜே.முத்தும்பி (நீர்வேலி வடக்கு), என்.எல்.வசந்தி(பிரதான வீதி, சுழிபுரம்), ரி.பிரதீஸ்(அண்ணாபவனம்,கருகம்பானைவீதி,கீரிமலை), என்.ஜஸ்ரஸ்முதலியார் மகேசன் வீதி, நவாலி வடக்கு), ஏ.தர்ஷினி (வட்டு.தெற்கு, வட்டுக்கோட்டை) (ச)

## வாழ்வகத்தின் தலைவர் நேற்றுக் காலமானார்

(யாழ்ப்பாணம்)

விழிப்புல வலுவிழந்தோரைப் பராமரிக்கும் வாழ்வகத்தின் ஸ்தாபகரும் தற்போதைய தலைவருமாகிய செல்வி அன்னலெட்சுமி சின்னத்தம்பி தனது 69-வது வயதில் நேற்று காலமானார்.

கடந்த சனிக்கிழமை நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர் நேற்று சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

விழிப்புலன் இழந்தோரின் கல்வி வளர்ச்சிக்காக கடந்த 1972 ஆம் ஆண்டிலிருந்து பணியாற்றி வந்த இவர் ஒரு ஓய்வு பெற்ற ஆசிரியை ஆவார். (ச)

# ஏ.எல்.பெறுபேறுகள் இம்மாத இறுதிக்குள்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் இம் மாத இறுதிக்குள் வெளியிடப்படவுள்ளன.

கடந்த மே மாதம் நடைபெற்ற உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் இம் மாத இறுதிக்குள் வெளியிடப்படவிருப்பதாக பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் நடைபெற்ற பரீட்சையின் செய்முறைப் பரீட்சை நடத்தப்படவில்லை.

அப் பகுதிகளில் ஏற்பட்டிருந்த அமைதியின்மை காரணமாக செய்முறைப் பரீட்சைகள் ரத்து செய்யப்பட்டிருந்தன.

எனவே அப் பகுதிகளில் செய்முறைப் பரீட்சைகளை மீள நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார். (ச-7)

# இரு இளைஞர்கள் கடத்தப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம்நள்ளிரவில் இரு இளைஞர்கள் வெள்ளைவான் குழுவினரால் கடத்தப்பட்டுள்ளனர்.

அன்னசத்திரலேனைச் சேர்ந்த பழனிவேல் சுதர்ஷன் என்பவர் நேற்று முன்தினம் இரவு கடத்தப்பட்டதாக யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

வான் ஒன்றில் வந்த சிலர் தமது மகனை பலாத்காரமாக வெளியே அழைத்துச் சென்றதாக பெற்றோர் தமது முறைப்பாட்டில்தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பலாலி வீதி பரமேஸ்வராச் சந்தியில் இளைஞர் ஒருவர் கடத்தப்பட்டார். நேற்று முன்தினம்இரவு பிரஸ்தாப இளைஞனின் வீட்டிற்குச் சென்ற வெள்ளைவான் குழு அவரைக் கடத்திச் சென்றதாக அவரது பெற்றோர் மனித உரிமைக் குழுவில் முறையிட்டுள்ளனர். (ச-5)

## பின்னுறுதித் தீர்வை

### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

சர்வபிபாலன் சுகிர்தா
127/17,கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

வழக்காளி

வழ.இல.மணநீக்கம்/476

எதிராக

சாயி வசந்தராசா சர்வபிபாலன்
மே/பா. திருமதி தர்மலிங்கம் ஜெயபிபாலன்
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

எதிராளி

இவ்வழக்கு 2004-ம் ஆண்டு ஆடி மாதம் 30 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற நீதிபதி திரு இ.த.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வந்தபோது வழக்காளியும் வழக்காளி சார்பில் பதிவு பெற்ற சட்டத்தரணி திரு.மு.திருநாவுக்கரசு அவர்களும் பிரசன்னமாயிருக்க வழக்காளியின் சட்டத்தரணி இவ்வழக்கில் எதிராளிக்கு அழைப்புக்கட்டளை சேவித்து இந்த அழைப்புக் கட்டளை சேவித்து திரும்பல் தினமான இன்று எதிராளி மன்றில் சமுகமின்மையால் இவ்வழக்கை ஒருமுக விளக்கத்திற்கு நியமித்து வழக்காளியின் சாட்சியத்தை பதிவு செய்ய மன்றின் அனுமதியைக் கோரி மன்றின் அனுமதியுடன் வழக்காளியின் சாட்சியம் நெறிப்படுத்தப்பட்டபின்னர் வழக்காளியின் பிராது வ1, வ1அ, ஆவணங்கள் வழக்காளி மன்றில் அளித்த சாட்சியம் ஆகியவற்றுடன் வழக்கேட்டை பரிசீலித்து வழக்காளி பிராதில் கோரிய நிவாரணங்களை பெறத் தகுதியுடையவர் என கண்டு பின்வருமாறு கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகிறது.

வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையே 1999 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 18 ஆம் திகதி நிறைவேறிய பதிவுத் திருமணத்தை எதிராளி வழக்காளியை விட்டு வேறு ஒரு பெண்ணுடன் சோர உறவு வைத்து வாழ்வதால் எதிராளி வன்ம உறவுறுப்பு செய்த குற்றத்துக்காக இத்தால் இரத்து செய்து தீர்பளிக்கப்படுகின்றது.

இப் பின்னுறுதி தீர்வையின் பிரதி வலம்புரிப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தல் மூலம் எதிராளிக்கு பதில் சேவகம் செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் எதிராளி எதுவித நடவடிக்கையும் எடுக்கத் தவறும்பட்சத்தில் விதிக்கப்பட்ட காலம் முடிவடைந்ததும் இப் பின்னுறுதித் தீர்வையானது முற்றான தீர்வையாக்கப்படுமென கட்டளையிடப்படுகின்றது.

2004 ஆம் ஆண்டு ஆடி மாதம் 30 ஆம் திகதி

இ.த.விக்னராஜா
மாவட்ட நீதிபதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
து.சிறீமோகன்
பதிவாளர்.
மாவட்ட நீதிமன்றம்
யாழ்ப்பாணம்.

வரைந்தது:
மு.திருநாவுக்கரசு
வழக்காளியின் சட்டத்தரணி.

(540)

# ஆணையாளராகப் பதவி ஏற்றுள்ள போதிலும் அபிவிருத்திப் பணியை மேற்கொள்ள முடியவில்லை

## புதிய ஆணையாளர் கவலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர ஆணையாளராக பதவியேற்ற போதிலும் தன்னால் புதிய அபிவிருத்தித் திட்டங்கள் எதனையும் மேற்கொள்ள முடியாதிருப்பதாக யாழ்.மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ கவலை தெரிவித்தார்.

இன்றைய சூழ்நிலையில் சுகாதாரம், நீர்விநியோகம் ஆகிய பணிகளை மாத்திரமே முன்னுரிமை அடிப்படையில் செய்யக் கூடியதாகவிருப்பினும் அதற்குக்கூட வழங்கல் பற்றாக்குறையால் 15 தினங்களுக்கு மேல் செய்யமுடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மட்டுப்படுத்தப்பட்ட வாகனங்களைப் பணியில் ஈடுபடுத்தினாலும் எரிபொருள் பற்றாக் குறையால் அதைக்கூட பூரணமாக செய்ய முடியாதிருப்பதாக அவர் மேலும் கூறினார்.

இருப்பினும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட முக்கிய அபிவி ருத்திப் பணிகளான வீதி அபிவிருத்தி, ஆரியகுள அபிவிருத்தி வேலைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் கூறினார். (ச-133)

# புலிகளுக்கு அனுப்பிய குண்டுகளே ஆந்திர மாநிலத்தில் பிடிபட்டவை

## இந்திய உளவுத்துறை தகவல்

(சென்னை)

இந்தியா ஆந்திர மாநிலத்தில் பிடிபட்ட ரொக்கெட் குண்டுகள் மற்றும் லோஞ்சர்கள் என்பன விடுதலைப்புலிகளுக்கு கொண்டு செல்லப்பட்டதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சென்னையிலிருந்து அனுப்பப்பட்ட ரொக்கெட் குண்டுகள் லோஞ்சர்களும் விசாகப்பட்டணம் அல்லது மங்களூர் வழியாக விடுதலைப் புலிகளுக்கு சென்று கொண்டிருப்பதாக சந்தேகம் எழுந்துள்ளது.

இதற்கு மாவோயிஸ்ட் தீவிவாதிகள் உடந்தையாகவிருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது.

ஆந்திர மாநிலத்தில் பிடிபட்ட ரொக்கெட்குண்டுகள் லோஞ்சர்கள் சென்னையிலிருந்து அனுப்பப்பட்டவை விடுதலைப்புலிகளுக்கானவை என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சென்னையிலேயே இவை தயாரிக்கப்பட்டிருக்கலாமென்றும் கூறப்படுகின்றது. பல்வேறு பட்டறைகளிலும் உருக்காலைகளிலும் தயாரிக்கப்பட்ட பாகங்களை ஒருங்கிணைத்து லோஞ்சராகவும் குண்டுகளாகவும் மாற்றி சென்னையிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என உளவுப் பிரிவின் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ச-5)



தென்னிந்தியத் திரைப்பட நடிகர்களான சூர்யா மற்றும் ஜோதிகாவுக்கும் நேற்று தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி தலைமையில் திருமணம் நடைபெற்றது. இந் நிகழ்வில் கலைஞர் கருணாநிதி சூர்யா தம்பதியினரை வாழ்த்துவதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயத்திற்காகவும் தர்மத்திற்காகவும் பொதுஜன அபிப் பிராயத்தையும் எதிர்த்து நிற்க தயாராக வேண்டும்.

*-சாக்கிரட்டீஸ்*

வலம்புரி

# அவசரமான 'சமாதானம்' தேவை

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் உடனடியாக முன்னெடுக்கப் படுவது அவசியமாகும்.

நாளுக்கு நாள் வெளிவரும் பயங்கரமான செய்திகளால் மக்கள் கதிகலங்கிப் போயுள்ளனர்.

இந்நிலையில் அவசரமான சமாதானத்தின் தேவையை அனைவரும் வலியுறுத்தும் காலகட்டம் உருவாகியுள்ளது.

சமாதான முயற்சிகளில் ஈடுபட்டிருந்த நோர்வேயின் மௌனமும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அமைதியும் சமாதான முயற்சிகள் கைவிடப்பட்டு விட்டனவோ! என்ற உணர்வை ஏற்படுத்தி நிற்கின்றன.

இந்நிலையில் சமாதானத்திற்காக குரல் கொடுக்கும் தார்மீகப் பொறுப்பு மதத் தலைவர்களிடமும் புத்திஜீவிகளிடமும் முன்நிறுத்தப் படுகின்றது.

மதத் தலைவர்கள் நாட்டில் அமைதியான சூழ்நிலை ஏற்படுவதற்காக குரல் கொடுக்க வேண்டும். மதத் தலைவர்கள் மௌனமாகி விட்டால் அப்பாவி மக்களுக்காக குரல் கொடுப்பது யார்? என்ற கேள்வி எழும்.

இந் நாட்டில் எல்லோரும் நிம்மதியாக வாழும் சூழ்நிலை ஏற்படுவதற்காக அனைவரும் பாடுபட வேண்டும்.

ஒவ்வொரு தனிமனிதனதும் உரிமை, சுதந்திரம், பாதுகாப்பு என்பன உறுதிப்படுத்தப்படுகின்ற போதே நாட்டில் அமைதி நிலவ முடியும்.

உலக வல்லரசுகள் தமது நலனுக்காக வறிய நாடுகளைக் குழப்பி இன்பம் காணுகின்றன. வளர்முக நாடுகளின் திறமையற்ற அரசியலும் மதக் கொள்கைகளும் தம்மைத் தாமே அழித்துக் கொள்வதாக இருக்கின்ற துயரம் தவிர்க்கப்படுவதற்குப் புத்திஜீவிகள் முன்வரவேண்டும்.

புத்திஜீவிகளும் இன, மத, மொழி வேறுபாடுகளை தலையில் தூக்கி வைத்தால், அழகிய இலங்காபுரியில் இரத்தக்கசிவு தொடர்ந்து இருக்கவே செய்யும்.

எனவே அனைத்து மக்களும் சம உரிமையோடு சுதந்திரமாக வாழவும் அவர்கள் தத்தம் இறை கொள்கைகளைக் கடைப்பிடிக்கவும் ஏழைகள் மீது இரக்கம் கொள்ளவும் வழி செய்யப்பட வேண்டும்.

இதற்காக புத்திஜீவிகளிடையே ஒற்றுமையும் ஒருமைப்பாடும் திறந்த மனப்பாங்கும் உருவாகுவது அவசியமாகும்.

மதத் தலைவர்கள் தாமுண்டு தம்பாடுண்டு என்று இருந்து விட்டால், நமக்கென்ன வேலை என்று புத்திஜீவிகள் நினைத்துக் கொண்டால் உயிரிழப்புக்களும் அழுகுரல்களுமே இந்த நாட்டில் மிஞ்சும்.

இதனைத் தவிர்ப்பதும் தடுப்பதும் அப்பாவி மக்களுக்காக செய்யும் பெரும் பணியாகும்.

கூடவே சட்டத்துறை தனது பொறுப்பாண்மையை அமுல்படுத்தி பொதுமக்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்க முன்வர வேண்டும்.

# நான்கு நாட்கள் சேவையில் ஈடுபடுவதற்கு போதுமான டீசலே கையிருப்பில் உள்ளது

## இ.போ.ச. முகாமையாளர் தகவல்

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் 15 பஸ்கள் நான்கு நாட்களுக்குச் சேவையில் ஈடுபடுவதற்குத் தேவையான டீசலே இருப்பில் உள்ளதாக யாழ்.போக்குவரத்து முகாமையாளர் க.கணேசபிள்ளை கவலை தெரிவித்துள்ளார்.

பஸ் சேவையை முழுமையாக வழங்குவதற்கு தேவையான டீசல் கையிருப்பில் இல்லை. இந் நிலையில் அரச அதிபரினால் வழங்கப்பட்ட 6 ஆயிரத்து 600 லீற்றர் டீசல் இருப்பில் உள்ளது. இவை நான்கு நாட்களுக்குப் போதுமானதாகவே உள்ளது என் அவர் கூறினார்.

போக்குவரத்துச் சபையின் ஒவ்வொரு சாலைகளிலிருந்தும் கிடைக்கின்ற வருமானம் நாளுக்கு நாள் குறைவடைந்து வருகின்றது. இதனால் நட்டத்தை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஊழியர்களுக்கும் சம்பளங்களை உரிய முறையில் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தற்போதைய நிலையில் ஊழியர்களுக்கு 6 ஆயிரம் ரூபா முற்பணமாகவே வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை இக்கட்டான நிலையிலும் மக்களின் நலனை கருத்திற் கொண்டு தீவகத்திற்கு மூன்று தடவைகள் சேவை மேற்கொள்ளப்படுவதாகவும் ஏனைய பிரதேசங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட சேவையே வழங்குவதாகவும் கணேசபிள்ளை மேலும் தெரிவித்தார். (ச-133)

# பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் என்ன செய்ய வேண்டும்?

## பாலித ஹோகன்ன கேள்வி



சமாதான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பான ஆக்க பூர்வமான யோசனை ஒன்றை விடுதலைப்புலிகள் முன்வைத்தால் அது தொடர்பாக பரிசீலிக்க தயார் என்று அரச சமாதானச் செயலகத்தின் செயலாளர் கலாநிதி பாலித ஹோகன்ன தெரிவித்தார்.

சமாதானச் செயற்பாடுகளின் தற்போதைய நிலைமை தொடர்பாகக் கருத்துக் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது;

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல் ஹெய்ம் கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதியுடன் தொலைபேசியூடாக தொடர்பு கொண்டு சமாதான செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடியுள்ளார்.

அதில் தற்போது இடம்பெற்றுவரும் மோதல்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்டுள்ளது. சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது தொடர்பாக எரிக்சொல் ஹெய்ம் ஜனாதிபதியிடம் கலந்துரையாடியுள்ளார்.

அதில் விடுதலைப்புலிகள், சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது தொடர்பாக அரசாங்கத்திடம் எதை எதிர்பார்க்கின்றனர் என்பதை விரிவாக விளக்கினால் அதுகுறித்து அரசு முடிவெடுக்கும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளதாக பாலித ஹோகன்ன தெரிவித்துள்ளார். (ச-5)

# இலங்கை அரசியலில் இந்தியா தலையீடா?

## இந்தியத் தூதுவர் விளக்கம்

(கொழும்பு)

சிறிலங்கா அரசியலில் தலையிடுவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக் குறித்து இந்தியத் தூதுவர் நிருபமாராவ் விளக்கம் அளித்துள்ளார். கொழும்பு ஆங்கில ஊடகம்ஒன்றிற்கு அவர் அளித்த நேர்காணலில் கூறியிருப்பதாவது;

அப்பலோ மருத்துவமனை விவகாரத்தைப் பொறுத்தவரையில் தமது இந்திய முதலீட்டாளர் நலன்களைப் பாதுகாப்பதற்காக தலையிட்டோம். இது விடயத்தில் உரிய வழிமுறையில்தான் தலையிடப்பட்டது. தனதுநாட்டுவர்த்தக நலன்களை மேம்படுத்துவதில் தூதுவருக்கும் கடமையுண்டு.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸைப் பொறுத்தவரையில் அக் கட்சி சொந்த முடிபின்படியே அரசாங்கத்தில்இணைந்துள்ளது. முன்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எமது இந்திய இல்லத்திற்கு வருகை தந்தது விதிமுறைகளுக்கு அப்பாலானது அல்ல.இதற்கு பல முன் உதாரணங்கள் உள்ளன.

நான் பெருவில் தூதுவராக இருந்தபோது அந் நாட்டு அரச தலைவர் தனது மகள் மற்றும் அமைச்சர்களுடன் விருந்து நிகழ்வில் கலந்து கொண்டிருந்தார். இலங்கையிலும் முன்னர் பல முறை ஜனாதிபதிகள் வந்துள்ளனர். ஆனால் அது குறித்து விபரிக்க முடியாது.

இந்தியாவைப் பொறுத்தவரையில் எந்தவொரு வெளிநாட்டு விவகாரங்களிலும் தலையிடாது என்பது அதன் வெளிவிவகாரக் கொள்கையில் முக்கியமானது ஒன்று. அதனையே நாம் செய்கிறோம்.

இலங்கைத் தூதுவராகப் பணியாற்றிய ஜே.என்.தீட்சித் காலத்தில் நாம் வெளிவிவகாரத் துறையில் பணியாற்றியுள்ளோம். மிகுந்த புத்திஜீவியான அவரிடமிருந்து நிறையப் பாடங்களை நாம் கற்றுள்ளோம்.

இலங்கை அமைச்சரின் விமர்சனம் குறித்து இந்திய அரசாங்கம் உடனே கருத்துத் தெரிவித்திருந்தமையானது என் மீது அரசாங்கம் வைத்திருக்கும் நம்பிக்கையை வெளிப்படுத்துவதாக இருந்தது என அவர் கூறினார். (ச-5)

# பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு சமாதானம் ஏற்படுத்தப்பட வேண்டும்

## யப்பானிய புதிய தூதுவர் வேண்டுகோள்

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான மோதல்கள் முற்றாக நிறுத்தப்பட்டு மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிக்கப்படுவதன் முக்கியத்துவம் குறித்து இலங்கைக்கான புதிய யப்பானியத் தூதுவர் சியோலி சுராக்கி வலியுறுத்தியுள்ளார்.

அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையேயான சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு நிரந்தர தீர்வு கிட்டும் என தாம் நம்புவதாக அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கான புதிய யப்பானியத் தூதுவராக நியமிக்கப்பட்ட சியோலி சுராக்கி கடந்த சனிக்கிழமை தனது நியமனப் பத்திரத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளித்தார். [illegible]

சேவைக்காலத்தை நிறைவு செய்ததையடுத்துப் புதிய தூதுவர் இங்கு வந்துள்ளதாக இலங்கைக்கான யப்பானியத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யப்பானிய அரசுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே 1952 ஆம் ஆண்டு இராஜதந்திர உறவுகள் ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் இலங்கைக்கு வருகை தந்துள்ள 16-வது தூதுவர் சியோலி சுராக்கி என்பது குறிப்பிடத்தக்கது.

1949 ஆம் ஆண்டு பிறந்த சியோலி சுராக்கி தனது பட்டப் படிப்புக்களை முடித்த பின்னர் யப்பானிய வெளிவிவகார சேவைகளில் இணைந்து கொண்டார்.

இவர் அமெரிக்கா,இங்கிலாந்து,சீனா ,பிரான்ஸ், சுவிஸ் [illegible] உட்பட பல நாடுகளில் இராஜதந்திரியாகக் கடமை [illegible] என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் பேச்சுவார்த்தையை தொடருமாறு இணைத்தலைமை நாடுகள் கோர வேண்டும்

## நீதி,சமாதானத்திற்கான ஆணையம் கடிதம்

(கொழும்பு)

தமிழ்மக்களது நீண்டகால இனப்பிரச்சினையை தீர்க்கும் முகமாக திட்டவட்டமான தெளிவான பிரேரணைகளை முன்வைப்பதன் மூலம் பேச்சுவார்த்தைகளை விட்ட இடத்திலிருந்து மீண்டும் ஆரம்பிக்கவேண்டுமென இணைத்தலைமை நாடுகளிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ்.மறைமாவட்ட நீதி,சமாதானத்திற்கான ஆணையம் உதவி வழங்கும் நாடுகளின் இணைத்தலைமைக்கு அவசர கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மனித உரிமை மீறல்களினால் பெருந்துயரில் மூழ்கியிருக்கும் யாழ்.குடாநாட்டு மக்கள் சார்பில் மனித உரிமைகள் மட்டில் தாங்கள் கொண்டிருக்கும் அளவில்லா ஈடுபாடுகளுக்காக எமது நன்றியை தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

எமது நாட்டின் தற்போதைய நிலைபற்றி அறிவதற்கு இன்று தாங்கள் கூடுவதாக நாம் அறிந்துள்ளோம்..11.08.2006 தொடக்கம் நாம் ஏனைய உலக நாடுகளுடன் தொடர்புகளின்றி தனிமைப்படுத்தப்பட்டு பட்டினிச் சாவை எதிர்நோக்கிய நிலையில் துண்டிக்கப்பட்டுள்ளோம்.

எமது மக்களின் தற்போதைய நிலையை செம்மைப்படுத்துவதற்கு உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டிய முன்னெடுப்புக்களை தங்கள் மேலான கவனத்திற்கு வைக்கின்றோம்.

பட்டினிச்சாவிலிருந்து மக்களைப் பாதுகாக்க உணவுப் பொருட்களை கொண்டு வருவதற்கும் மக்களின் அன்றாட போக்குவரத்துக்களை சீர் செய்வதற்கும் ஏ-9 நெடுஞ்சாலையைத் திறத்தல்.

தமிழ் மக்கள் தமது பாதுகாப்புக் காற்றை சுவாசிப்பதற்கும் இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள குடாநாட்டுப் பகுதிகள் விடுவிக்கப்பட்டு தம் சொந்த இடங்களில் நிம்மதியாக வாழ்வதற்குப் போர் நிறுத்த ஒப்பந்தத்தை முற்றாக செயற்படுத்தல்.

தமிழ் மக்களது நீண்டகால இனப்பிரச்சினையை தீர்க்குமுகமாக திட்டவட்டமான தெளிவான பிரேரணைகளை முன்வைப்பதன் மூலம் பேச்சுவார்த்தைகளை விடப்பட்ட இடத்தில் இருந்து மீண்டும் ஆரம்பித்தல்.

மீனவர்கள் தமது வாழ்வாதாரமான மீன்பிடித்தொழிலை தொடர்வதற்கு அனுமதித்தல். தொடரப்படும் நீதிவிசாரணைகளுக்கு புறம்பான கொலைகள்,காணாமல்போதல் போன்றவற்றை உடனடியாக நிறுத்த அரசுக்கு அழுத்தம் கொடுத்தல் .

நீதியான சமாதானத்திற்கு வழிவகுக்கக்கூடிய திட்டவட்டமான செயற்பாடுகளில் இரு பகுதியினரும் ஈடுபடும் வண்ணம் தங்கள் உதவி வழங்கல்களை இதற்கு இசைவாக்கிக் கொள்ளுதல் என அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

# கொழும்பு மாநகர சபை விரைவில் கலைக்கப்படும்?

(கொழும்பு)

மேல்மாகாண ஆளுநர்,கொழும்பு மாநகரசபையை கலைக்க தயாராகி வருவதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. கொழும்பு மாநகர சபையின் நிர்வாகம் உரிய முறையில் முன்னெடுக்கப்படுவதில்லை என குற்றம் சுமத்தியுள்ள நிலையில் மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா இன்று ஜனாதிபதியை சந்தித்து ஆலோசனையை பெற இருப்பதாக தெரிவித்திருக்கிறார்.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலின் போது ஐக்கிய தேசிய கட்சியின் கொழும்பு மாநகர சபையின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டது.

இதனால் சிறிசேன குரேயின் தலைமையிலான ஐக்கிய தேசியகட்சி சுயேட்சை குழு 1 ஐ ஆதரித்ததன் மூலம் அந்தக் குழு அதிகாரத்தை கைப்பற்றியுள்ளது.

எனினும் மாநகரசபையின் நிர்வாகம் தொடர்பில் சிறிசேன குரேயும் போதிய திருப்தி கொள்ளவில்லை என தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை மாநகர சபையின் தற்போதைய நிலைக்கு மிலிந்த மொறகொட,மொகமட் மகரூப்வ் போன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களும் சிறிசேன குரேயுமே காரணம் என முன்னாள் பிரதி முதல்வர் அகாஸ் ஸாலி தெரிவித்திருக்கிறார். (ச-7)

# ஓகஸ்ட் மாத முறைப்பாடுகளில் 50 பேரின் நிலைகுறித்து தகவலில்லை

## மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் யாழ்.மாவட்டத்தில் 67 பேர் காணாமல் போனதாக தமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாக மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ்.அலுவலக இணைப்பதிகாரி துரைராசா சுரேந்திரராஜா தெரிவித்தார்.

இம் முறைப்பாடுகளில் 14 பேரின் முறைப்பாடுகளில் சிலர் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் சிலர் வீடு திரும்பியதாகவும் முறைப்பாடுகள் வாபஸ் வாங்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர்மூன்று பேர் இராணுவ தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

ஏனைய 50 பேரின் நிலை குறித்து இதுவரை அறியப்படவில்லை என்றார். இதேவேளை அடிப்படை உரிமை மீறல் தொடர்பாக கடந்த மாதம் 76 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதாகவும் அவற்றில் 24 பேர் (கொடிகாமத்தில் -19 ,மானிப்பாயில் -5) விடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவின் இணைப்பதிகாரி குறிப்பிட்டார். (ச-5)

# வை.கோவை கைது செய்ய தமிழ் நாட்டில் கூட்டுச்சதி

(சென்னை)

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக பேசிய விவகாரத்தில் ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வை.கோவை கைது செய்ய வேண்டும் என இந்திய காங்கிரஸ் கட்சி கோரியுள்ளது.

வை.கோவை கைது செய்வதற்கு ஆளும் கட்சியும் காங்கிரஸ் கட்சியும் கூட்டுச்சதி செய்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் 21 ஆம் திகதி ஈழத்தமிழர்கள் பாதுகாப்பு பொதுக்கூட்டம் சென்னையில் ம.தி.மு.க.சார்பில் நடந்தது. அக் கூட்டத்தில் ம.தி.மு.க.பொதுச்செயலர் வை.கோ. பேசுகையில் விடுதலைப்புலிகளை நேற்றும் ஆதரித்தேன் இன்றும் ஆதரித்தேன் நாளையும் ஆதரிப்பேன் என்று குறிப்பிட்டார்.

அதற்கு மறுநாள் காலையில் விடுதலைப்புலிகளை ஆதரித்து பேசிய வை.கோ மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அதற்கு சட்டம் தன் கடமையை செய்யும் என்று முதல்வர் கருணாநிதி பதிலளித்தார். இதற்கிடையில் வேலூர் பொதுக்கூட்டத்தில் இந்திய இறையாண்மைக்கு விரோதமாக வை.கோ பேசினார் எனவே அவர் மீது தேச விரோத நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வேலூர் எம்.எல்.ஏ.ஞானசேகரன் சட்டசபையில் பிரச்சினையை கிளப்பியுள்ளார். (ச)

# மங்கள சமரவீர ரஷ்யா பயணம்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ரஷ்யாவிற்கு பயணம் மேற்கொண்டுள்ளார். ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பதவிக்கான தேர்தலில் போட்டியிடும் இலங்கைக்கான ஜயந்த தனபாலவுக்கு ஆதரவு கோரி மங்கள சமரவீர இந்த பயணத்தை மேற்கொண்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இம் மாத பிற்பகுதியில் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் தேர்தல் நடைபெறவுள்ளது. (ச)

## இரு பெண்...

தேசிய துணைப்படையினுடையது என வும் விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை சாவகச்சேரி நீதிவான் பிறேம்சங்கர் யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் சென்று மேற்கொண்டார்.

இதேவேளை குறித்த சடலங்களை உறவினர்கள் அடையாளம் காண்பித்து பெற்றுக்கொள்ளலாம் என யாழ்.போதனாவைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-5)

## மட்டக்களப்பில்...

மோதலையடுத்து அப் பகுதி யில் இருந்து பொதுமக்கள் வெளியேறியுள் ளனர். இந் நிலையில் அப் பிரதேசத்தில் நேற் றுக் காலை 7 மணியளவில் பாரிய சுற்றி வளைப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (ச-5)

## இணைத்தலைமை...

சுமத்தலாம் எனவும் கருத்துக்களை வெளியிட முடியும் எனவும் தெரியவருகிறது.

இந்த நிலையில் இணைத்தலைமை நாடுகள் பிரசர்ஸ் நகரில் இரண்டு மாதங்களுக்கு பின்னர் கூடும் அதே வேளை, நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல் ஹெய்மின் வழிநடத்தலிலேயே இந்த மாநாடு இடம் பெற இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இன்று பிரசர்ஸில் இடம்பெற இருக்கும் மாநாட்டில் நோர்வேயின் விசேட சமாதான தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயர், நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோர் கலந்து கொள்ள இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-7)

## மந்துவில்...

சம்பவ இடத்திற்கு நேரில் சென்று மரண விசாரணைகளை மேற்கொண்ட சாவகச்சேரி நீதிவான் பிறேம்சங்கர் மற்றும் சட்ட வைத்திய அதிகாரி பாலசுப்பிரமணியம் ஆகியோர் விசாரணைகளின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தனர். (ச-5)

## ஜனாதிபதி மகிந்த-ரணில்...

இச் சந்திப்பில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் ஜனாதிபதியுடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் மைத்திரிபால சிறிசேனாவும் கலந்து கொண்டார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பிரதித் தலைவர் கரு ஜெயசூரியவும் பங்கு கொண்டார்.

நேற்றைய சந்திப்பின்போது தடைப்பட்டுப் போயுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்தே ஆராயப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இரு தரப்பினரும் எதிர்வரும் காலத்தில் கலந்துரையாடிய பின்னரே முடிபுகளை மேற்கொள்வதெனவும் தீர்மானித்துள்ளனர்.

இதற்காக இரு குழுக்களை அமைத்து அக்குழுவினரிடம் பொறுப்புக்களை கையளிப்பதெனவும் முடிபு எடுக்கப்பட்டுள்ளது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## துன்னாலை...

சுட்டுவிட்டு தப்பிச்சென்ற தாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை சம்பவ இடத்திற்கு அருகில் நின்ற மற்றொரு இளைஞனும் படுகாயமடைந்துள்ளார். கிட்டிணன் உதய குமார் (வயது 24) என்பவரே காயமடைந்தவராவார். இவர் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனாவைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டார். (ச-10)

## சுன்னாகத்தில்...

இளைஞனின் அரைநாண்கொடியில் இரண்டு செப்புத் தாயத்துக்கூடுகள் கட்டப்பட்டிருப்பதாக விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.சம்பவ இடத்திற்கு நேரில் சென்று விசார ணைகளை மேற்கொண்ட மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் மரண விசாரணைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சடலத்தை ஒப்படைத்து விசாரணையின் பின்னர் அடையாளம் காணும் பொருட்டு வைத்தியசா லையின் பிரேத அறையில் வைக்குமாறு சுன்னாகம் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.2 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் நோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.09.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.